# முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

அசல் வழக்கு எண். 28/2021

நாள் : 08.06.2023

வா.சா.2 திரு.மாரி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. வாதிகள் கேட்டுக்கொண்டதால் நான் சாட்சியம் அளிக்கிறேன். தரப்பினர்களுக்கிடையே நான் பஞ்சாயத்து செய்ததால் நான் சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல் சாட்சியம் வழக்கறிஞரின் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. யாரும் என்னை வற்புறுத்தவில்லை. எனது முதல் சாட்சியத்தில் 2 வது பத்தியில் கூறியுள்ளதுபோல் அவர்கள் சர்வசுதந்திரமாகத்தான் அனுபவித்து வருகிறார்கள். சுமார் 30 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருகிறார்கள். வாதியும் 2 வது வாதியின் கணவர் ரவீந்திரநாதனும் சொத்தை மேம்படுத்தியது சம்பந்தமாக அவரது அலுவலகங்கள் வாயிலாக அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தினார்களா என்று எனக்கு தெரியாது. அவர்களது சம்பளத்தை வாங்கித்தான் மேம்படுத்தினார்கள். வீட்டை மேம்படுத்தியது சம்பந்தமாக அரசாங்கத்தில் இருந்து வரைபடம் அனுமதி பெற்ற ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவர்கள் வீட்டை மேம்படுத்தியது எனக்கு நேரடியாக தெரியும் என்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதிகள் சுயசம்பாத்தியத்தில் வீட்டை கட்டினார்கள் என்பதற்கு ஆதாரமாக ஆவணங்கள் தாக்கல் செய்யாத நிலையில் எனது சாட்சியம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 வது வாதி ராமமூர்த்தி அரசாங்கத்தால் கட்டாய ஓய்வு பெறவேண்டிய நிலை ஏற்பட்டது. கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்கவிடாமல் பிரதிவாதிகள் இடைஞ்சல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. கிணற்றில் கயிறு கொண்டு தண்ணீர் இறைக்கமுடியாமல் மோட்டார் வசதி உள்ள வேறு ஒரு இடத்திற்கு வாதிகளாகவே சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களை எவ்வித தொல்லையும் செய்யவில்லை என்றும் வாதிகள் வீட்டை பராமரிக்க முடியாமல் அவர்களாகவே சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. வாதிகளின் தூண்டுதல் பெயரில் பிரதிவாதிகளை கலங்கப்படுத்தும் நோக்கில் தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து நடந்ததாக எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. காரணம் பேச்சுவார்த்தைக்கு பிரதிவாதிகள் உடன்படாததால் ஆவணம் ஏற்படவில்லை. 2018 யிலேயே 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்துவிட்டதால் 2019 ல் பஞ்சாயத்து நடந்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான். 2019 என்று பிரமாண வாக்குமூலத்தில் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. நான் தவறாக 2019 ல் பஞ்சாயத்து நடந்ததாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளதால் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 192 ன் கீழ் குற்றம் என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. வாதிகள் இருவரும் வாடகை வீட்டில் குடியிருக்கவில்லை என்றும் அவர்களது சொந்த வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதிகளுக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.

ஒப்பம்/ஜி. விஜயா,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்